அரசறிவியல்

தரம் - 12, 13

# சமஷ்டி அரசியலமைப்பு மாதிரி



e தக்சலாவ கல்விக்கூடம்
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

## தேர்ச்சிமட்டம் 4.1.2

அரசியல் அதிகாரம் பகிர்வதையும் செறிவாக்குவதையும் அடிப்படையாகக்கொண்டு ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டி ஆட்சி யாப்புக்கள் என்று வகைப்படுத்தப்படுகின்றன. அதாவது இறைமை அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதில் பங்குபற்றும் அதிகார நிலையங்ளின் அடிப்படையில் இந்த வகையீடு மேற்கொள்ளப்படுகின்றது

சமஷ்டி ரசியலமைப்பு என்பது ஒரு நாட்டின் சகல அதிகாரங்களும் மத்திய அரசுகள், மாநில அரசுகள் என்ற இரு வகையான அரசுகளிடம் பிரிக்கப்பட்டு மத்திய அரசுகள் மாநில அரசுகளும் இறைமையுடன் தொழிற்படும் வகையில் உருவாக்கப்படும் யாப்பே சமஷ்டி யாப்பு என்பர். உதாரணமாக ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, ஜேர்மன், சுவிஸ்லாந்து, போன்றவற்றை குறிப்பிடலாம்

- சமஷ்டி அரசியலமைப்பு பெரடல் அரசியலமைப்பு என்றும் அழைக்கப்படும்
- இறைமை அதிகாரத்தை பங்கிட்டு நடைமுறைப்படுத்தும் ஆட்சிமாதிரியாகும்
- இது ஐக்கியத்தன்மை ,பிரதேசபல்வகைத்தன்மை, வேறுபட்ட அபிலாஷைகள் என்பவற்றை மையமாக கொண்டு கட்டியெழுப்பப்பட்டது

### சமஷ்டி அரசியலமைப்பு உருவாவதற்கான காரணங்கள்

- ஒரே அரசாக ஒன்றுபடுவதற்கான தேவை
- பெரிய நிலப்பரப்புகள் உள்ள அரசுகள் காணப்படல்
- கலாச்சாரம் மற்றும் இன பன்மைத்துவம் நிலவுதல்
- பிரிந்த நாடு ஒன்றிணைதல்
- ஒற்றையாட்சி அரசொன்று பல்வகைத்தன்மையின் அடிப்படையில் சமஷ்டி அரசாக மீள்கட்டமைக்கப்படல்




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## சமஷ்டி அரசியலமைப்பின் பண்புகள்

- மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் காணப்படும்
- மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களின் அதிகாரங்களில் ஒன்றின் அதிகாரம் மற்றொன்று கைப்பற்ற முடியாது
- மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கு தனித்துவமான விடயங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கும். மத்திய அரசுக்கு பொதுவான பாதுகாப்பு வெளிநாட்டு தொடர்பு, நிதிசார் செயற்பாடுகள் என்பனவும் மாநில அலகுக்கு கல்வி சுகாதாரம் போன்றனவும் ஒப்படைக்கப்பட்டிருக்கும்
- மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களின் அதிகாரங்கள் எழுதப்பட்ட அரசியலமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும்
- பெரும்பாலான சமஷ்டி நாடுகளில் ஈரவை மன்றங்கள் காணப்படும்
- மத்திய மற்றும் மாநில முரண்பாடுகளை தீர்க்க உயர்நீதிமன்றமும் சமஷ்டி நீதி மன்றமும் செயற்படும்

## சமஷ்டி அரசியலமைப்பு தொடர்பான அனுகூலம் மற்றும் பிரதிகூலங்கள்

### அனுகூலம்

ஒற்றையாட்சி போன்று அல்லாமல் பிரதேச மற்றும் பிராந்திய அபிலாஷைகளுக்கு அரசியலமைப்புகள் உறுதியினை வழங்குகின்ற அரசியல் குரலினை பெற்றுக்கொடுக்க முடிகின்றமை

மத்திய அரசாங்கத்தினை சட்டத்துறையின் இரண்டாம் மன்றத்தின் மூலம் பிராந்திய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தினுள் ஏதேனும் அளவிலான பிரதிநிதித்துவம் மற்றும் அதிகாரத்தை அனுபவித்தல்

அரசாங்கத்தின் அதிகாரமானது பரவலடைந்து காணப்படுவதால் தனியாள் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு உதவும் சமனிலை தலையீடுகள் கொண்ட வலையமைப்பு உருவாகும்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பிரிந்திருக்கின்ற சமுகமொன்றை ஒற்றுமைப்படுத்த மற்றும் ஒன்றிணைந்த வகையில் கொண்டுசெல்வதற்கான நிர்வாக இயந்திர முறைமையொன்றினை சமஷ்டி வழங்கும் இந்த தொடர்புகளை எடுக்கும் போது இனரீதியாப்பிரிந்த மற்றும் பிரதேசரீதியாகப்பிரிந்த சமுகத்திற்கு சமஷ்டித்தீர்வு சிறப்பானதாக அமையும்

பரந்தளவான அரசுகளை ஒழுங்கமைப்பதற்காக இயற்கையான பிரயோக ரீதியான திட்டமொன்றை சமஷ்டிமுறை மூலம் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது

## பிரதிகூலம்

இருபதாம் நூற்றாண்டில் இருந்து சமஷ்டி அரசியலமைப்பு மத்தியமயப்படுத்தல் என்ற திசைக்கு மாற்றதடைவதை தடுப்பதற்கு சமஷ்டி வாதத்திற்கு முடியாமல் போயுள்ளது

இம்முறை மூலம் அரசாங்கப்பிரிவினை ஏற்பட முடியும் என்பதோடு அரசுக்கு கேந்திர மயப்படுத்தலுக்கான அழுத்தம் வலுவடையும்

சமஷ்டி அரசாங்கம் ஒற்றை மற்றும் மத்திய மயப்படுத்தப்பட்ட அரசாங்கங்களைப் போல் செயற்றிறனானதும் வலுவானதுமான அரசாங்கங்களாக இல்லாதிருந்தமை

## சமஷ்டி அரசியலமைப்பு உருவாக்கப்படும் மூன்று வழிமுறைகள் காணப்படுகின்றன

பொது அபிலாஷைகளை அடைந்து கொள்வதற்கு முன்னர் பிரிந்து காணப்பட்ட அலகுகள் ஒன்று சேர்ந்து மத்திய அதிகார முறையொன்றை உருவாக்கி கொள்ளல்
1787-அமெரிக்கா
1848– சுவிஸ்லாந்து
1867– கனடா

ஒற்றையாட்சி அரசொன்று இனத்துவ மற்றும் கலாச்சார பல்வகைத்தன்மையின் அடிப்படையில் சமஸ்டி அரசாக மீள்கட்டமைக்கப்படல்

உதாரணம்:- ஸ்பெயின், மலேசியா
தென்னாபிரிக்கா

பிரிந்த நாடு ஒன்று ஒன்றிணைந்து சமஷடி ஆட்சி முறை ஒன்றாக மீள கட்டமைக்கப்படல்

உதாரணம்:- பெல்ஜியம்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



வினாக்கள்

1) தனி அரசினுள் அரசாங்கங்களுக்கிடையில் நிர்வாக அதிகாரத்தை இணைத்தல் அல்லாமல் இறைமை அதிகாரத்தைப் பங்கிட்டு நடைமுறைப்படுத்தும் அரசியலமைப்பு மாதிரி அழைக்கப்படுவது.................................

2) உலகில் சமஷ்டி அரசியலமைப்பை சிறப்பாக பின்பற்றப்படும் நாடு ஒன்றையும், பாதி சமஷ்டி பின்பற்றும் நாடு ஒன்றையும் குறிப்பிடுக?

3) சமஷ்டி அரசியலமைப்பின் பாதகவிளைவுகள் இரண்டு தருக?

4) சமஷ்டி அரசியலமைப்பின் பண்புகளை ஆராய்க?

5) சமஷ்டி அரசியலமைப்பு உருவாக ஏதுவான காரணிகளை ஆராய்க?

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk